www.Padasalai.Net www.CBSEtips.in

Ts10T

தென்காசி மாவட்டம்

இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

20-11-2023

வகுப்பு 10

தமிழ்

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 50

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **8×1=8**

1) சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

2) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும். மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே -

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

3) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது -

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

4) மேன்மை தரும் அறம் என்பது?

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறு பிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது?

5) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.

அ) உதியன் சேரலாதன் ஆ) அதியன் பெருஞ்சாத்தான்

இ) பேகன் கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் திருமுடிக்காரி

6) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் -

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**பாடலைப் படித்து விடை தருக.**

'பகர்வனர் திரிதிரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்'

7) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?

அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) கம்பராமாயணம் ஈ) காலக்கணிதம்

8) காருகர் - பொருள் தருக.

அ) ஓவியர் ஆ) கைத்தொழில் செய்வோர்

இ) நெய்பவர் ஈ) பொற்கொல்லர்

**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக.** **6×2=12**

9) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

10) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

11) பாசவர், வாசவர், பல நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

12) 'கொள்வோர் கொள்க. குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது' - அடி எதுகையை எடுத்தெழுதுக.

**இலக்கணக் குறிப்பெழுதுக** - கொள்க, குரைக்க

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



13) குறிப்பு வரைக - அவையம்

14) புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.

15) கலைச்சொல் தருக. அ) Irrigation ஆ) Renaissance

16) குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக. (17 கட்டாய வினா)** **4×3=12**

17) **அடிமாறாமல் எழுதுக.**

'தூசும் துகிரும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

**(அல்லது)**

'மாற்றம் எனது' எனத் தொடங்கும் காலக்கணிதப் பாடல்

18) 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' இடம் சுட்டிப்பொருள் விளக்குக.

19) முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

20) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

21) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

22) **கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு எழுதுக.**

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ

டைந்துடன் மாண்ட தமைச்சு.

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **2×5=10**

23) அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' எனும் உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

24) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



சிவக்குமார். மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மேநிப
வல்லம் - 627809
Tenkasi Dist.

**உ) விரிவான விடையளிக்க.** **8×1=8**

25) அ) நாட்டுவிழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'மங்கையராய்ப் பிறப்பதற்கே' என்னும் தலைப்பில் சாதனைப் பெண்கள் இருவரைப் பற்றி விவரித்து எழுதுக.

\- - - - - - -

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com